REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 8உ சனி (20—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 9உ ஞாயிறு (21—4—57) [இதழ் 268

மதுவிலக்கு வழக்கில் போலீஸ் கடமை?

உயர்நீதிமன்ற நீதிபதி இடித்துரைக்கின்றார்!

சென்னை, ஏப். 18—

"இம்மதுவிலக்கு வழக்கில் போலீஸ் துறையினர் மேற்கொண்ட விசாரணை திருப்திகரமானதாகவோ போதுமானதாகவோ இருப்பதாகச் சொல்வதற்கில்லை. உதகமண்டலத்தில் உள்ள வியாபாரி யார் என்பதையும் இவ்வளவு பெரிய அளவில் சுத்தமான சாராயத்தை அனுப்பி வைத்தவர் யார் என்பதையும் கண்டறிய எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை.

"இக்கள்ளச் சாராயம் உற்பத்தி செய்வதற்கும் தவறான விளக்கந்தாள்கள் ஒட்டிய விதவிதமான மருந்து புட்டிகளில் அதை அடைப்பதற்கும் பின்னணி பலமாக இருந்துவரும் திறமைசாலிகளை அலட்சியமாகக் கருதிவிட்டு, அச்சாராயத்தைக் கடத்திச் செல்லுகின்றவர்கள் மீது மட்டும் வலுவில் வழக்குத் தொடர்வதால் பயன் என்ன? உண்மையிலேயே போலீஸ் விசாரணை மேற்கொண்டு இருக்குமானால், சாராயம் உற்பத்தி செய்யப்படும் இடத்தையும், அதை அடைக்க எங்கிருந்து பெருத்த எண்ணிக்கையில் புட்டிகள் வாங்கப்பட்டன என்பதையும் தெரிந்துகொண்டிருக்க முடியும்.

"மேற்படி சாராயப் புட்டிகளை ஏற்றிவந்த சுப்பராய செட்டியார் என்பவருக்குச் சொந்தமான டாக்சிகார், இப்பாதகமான செயலைச் செய்ய எவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை அறிந்துகொள்ள போலீஸ் முயற்சிக்கவே இல்லை. அந்த டாக்சி காரை இதற்காக வாடகைக்கு அமர்த்தினது யார்; என்பதையும் கிரிமினல் ரிவிஷன் மனு கொடுத்துள்ளவருக்கும் டாக்சி சொந்தக்காரரான சுப்பராய செட்டிக்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா என்பதையும் அறிந்துகொள்ள போலீஸ் முயன்றிருக்க வேண்டும். இம்மாதிரி வழக்குகளில் மதுவிலக்குச் சட்டம் 7-வது பிரிவின்படி டாக்சி டிரைவர், பிரயாணி, டாக்சி சொந்தக்காரர் முதலியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்பதை எச்சரிக்கையுடன் போலீஸ் ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயப்படவில்லையானால், உண்மையான குற்றவாளி விலக்கப்பட்டுவிடுவான்; சுலபமாகச் சிக்கிக்கொள்ளக்கூடியவர்கள் வழக்கில் சிக்கிக்கொள்ளுவார்கள் என்ற கருத்து இடம் பெறும்."

—இவ்வாறு, கள்ளச் சாராயம் கடத்திவந்த வழக்கு ஒன்றில், கீழ்க்கோர்ட்டில் தண்டிக்கப்பட்டவர் செய்துகொண்ட ரிவிஷன் மனுவின்மீது தீர்ப்பு கூறிய உயர் நீதிமன்ற நீதிபதி கே. இராமசாமி கருத்தறிவித்துள்ளார்.

வழக்கின் விவரமாவது:—

கடந்த ஜூன் மாதம் முதல் தேதி, மேட்டுப்பாளையம் பவானி பாலத்திற்கு அருகில் வந்து கொண்டிருந்த ஒரு டாக்சி காரின் பின் தொட்டியிலிருந்து, மூன்று கோணிப்பைகளில் கட்டப்பட்டிருந்த 645 கள்ளச் சாராயப் புட்டிகளை, மதுவிலக்குப் போலீஸ் கைப்பற்றியது. அக்கள்ளச் சாராயம் முழுதும் சுத்தமான சாராயம் என்பது பரிசோதனையிலிருந்து தெரியவரவே, டாக்சி டிரைவர் பால்தாஸ் என்பவர்மீதும், அவர் பக்கத்தில் காரில் உடன்வந்த இராமசாமி என்பவர் மீதும் மதுவிலக்குச் சட்டப்படி போலீஸ் வழக்குத் தொடுத்தது.

சாராயப் புட்டிகளைக் கொண்ட மூட்டைகள் மூன்றும் உதகமண்டல வியாபாரி ஒருவருடையது என்றும், அவைகளைக் கோயம்புத்தூரில் டாக்சி காரில் வைத்ததாகவும், அதில் சாராயப் புட்டிகள் இருக்கின்றன என்பது தனக்குத் தெரியாதென்றும் டாக்சி டிரைவர் கூறினார்.

அதே காரில் பிரயாணம் செய்துவந்த இராமசாமி என்பவரும், குன்னூர் போவதற்காக அந்த டாக்சி காரில் சென்றதாகவும், மற்ற எதுவும் தனக்குத் தெரியாது என்றும் கூறினார்.

வழக்கை விசாரித்த மேட்டுப்பாளையம் மாஜிஸ்திரேட், அவர்கள் இருவரையும் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து, ஒவ்வொருவருக்கும் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

தண்டனையை எதிர்த்து கோவை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதியிடம் அப்பீல் செய்து கொண்டனர்.

குற்றவாளிகள் என்பதை உறுதிசெய்து, நீதிபதி தண்டனையின் காலஅளவை மூன்று மாதங்களாகக் குறைத்தார்.

அதையும் எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் ரிவிஷன் மனு தாக்கல் செய்யப்பட்டது. டாக்சியில் பிரயாணம் செய்த இராமசாமி சார்பில் இம்மனுவின் மீது நீதிபதி அளித்தத் தீர்ப்பில்தான் மேற்படி அறிவுரை போலீஸ் துறைக்குத் தரப்பட்டிருக்கிறது.

"சாராயத்தை ஏற்றிச்சென்ற டாக்சி காரைக் குறித்து வழக்கை விசாரித்த கீழ்க்கோர்ட் அற்பமாகக் கூறி இருக்கிறது. டாக்சியைப் பறிமுதல் செய்திருக்க வேண்டும் — அல்லது டாக்சி சொந்தக்காரரை மன்றத்திற்கு அழைத்து அவரிடம் விளக்கம் கேட்டிருக்கவேண்டும் கீழ்நீதிமன்றம்" என்றும், உயர் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

முறைகேடான வழக்கத்திற்கு முடிவு

பல ஆண்டுகளின் நடைமுறையை பிரிட்டிஷ் இராணியார் மீறினார்

இலண்டன், ஏப். 19—

கடந்த 200 ஆண்டுகளாகப் பிரிட்டிஷ் மன்னர்கள், பிரார்த்தனை செய்ய வெஸ்ட்மினிஸ்டர் கோயிலுக்கு மட்டுமே செல்வது வழக்கமாக இருந்துவந்திருக்கிறது; இந்த பழக்கத்தை யாரும் இதுவரையில் மீறியதில்லை.

மற்றக் கோயில்களுக்குப் போகக்கூடாது என்றும், அது கௌரவக் குறைவானது என்றும், முறைகேடானது என்றும் கருதிவரப்பட்டிருக்கிறது.

ஆனால், தற்போது பிரிட்டிஷ் இராணியாக உள்ள எலிசபெத் அம்மையார், இந்தப் பழைய வழக்கத்தை மீறி இலண்டனை விட்டுப் புறப்பட்டு ஆல்பன்ஸ் கோயிலுக்குச் சென்றாராம். அங்குள்ள ஏழைகளுக்குப் பிச்சை யிட்டாராம்.

தனது பிறந்தநாளை முன்னிட்டு 31 வெள் நாணயங்களை ஏழைகளுக்கு வழங்கினார்களாம்!

டிராட்ஸ்கியின் மனைவி

அமெரிக்காவிற்கு வர அனுமதி

நியூயார்க், ஏப். 17—

1917-ல் நடைபெற்ற ரஷ்யப் புரட்சியின் தலைவர் டிராட்ஸ்கியின் வாழ்க்கைத் துணைவியார் அமெரிக்கா செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளரார்கள்.

ரஷ்யாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட அவரது கணவர் 1940-ல் கொலையுண்டது தெரிந்ததேயாகும். கடந்த 20 ஆண்டுகாலமாகவே அந்த அம்மையார் மெக்சிகோவில் வசித்துவந்துள்ளார்.

உலகப் பொதுவுடைமைப் பற்றியும், ரஷ்யாவின் ஆரம்பகால வரலாறு குறித்தும் அமெரிக்க அரசாங்கம் கண்டறிவதற்கு அந்த அம்மையார் அமெரிக்கா வர அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த அம்மையாருக்கு வயது 75 என்று கூறப்பட்டிருக்கிறது.

கூட்டுத் தொகுதி முறைக்குக் கண்டனம்

லீக் எதிர்க்குமாம்

மேற்குப் பாகிஸ்தானில் கூட்டுத் தொகுதி முறையை ஏற்படுத்த அரசாங்கம் செய்துள்ள முடிவை, முஸ்லீம் லீக் வன்மையாக கண்டித்திருக்கிறது. இதை எதிர்த்து கடுமையான போராட்டம் நடத்த உறுதி கொண்டிருப்பதாக லீக் தலைவர் அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் முடிவை, 'வெட்கக்கேடான பல்டி' என்று அவர் வர்ணித்துள்ளார்.

இந்தோனேஷியாவில் மீண்டும் கலவரம்

ஜகார்தா, ஏப். 19—

செலிபஸ் தீவில் மாகாஸ்கர் என்னும் இடத்தில் அரசாங்க இராணுவத்திற்கும்—தாருல் இஸ்லாம் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சண்டை நடந்துகொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. விமானப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறதாம்.

சூயஸ் கால்வாயில்!

பிரிட்டிஷ் கப்பல் பிரவேசம்

கெய்ரோ, ஏப். 19—

சூயஸ் கால்வாய் திறக்கப்பட்ட பிறகு முதல் முறையாக 3,600 டன் எடையுள்ள பிரிட்டிஷ் கப்பல் சூயஸ் கால்வாயில் பிரவேசித்ததாம்.

இந்தக் கப்பல், சுவிஸ் செலாவணியில் கால்வாய்க் கட்டணத்தைச் செலுத்தியதாம்.

மதுவிலக்கு அமுலாகும் மாநிலத்தில் இருப்பது துர்ப்பாக்கியமாம்!

உயர்ந்த ஜெர்மன் 'பீர்' தரமுடியவில்லையே என பிரகாசா வருந்துகிறார்

பம்பாய், ஏப். 19—

இந்தியா—ஜெர்மன் கலாசாரச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந்த விழாவிற்கு ஜெர்மன் வாணிபத்துறை பிரதிநிதிகள் வந்திருந்தனர். டாக்டர் கார்ல் எர்ட்மன் எனும் பொருளாதார அமைச்சரும் வந்திருந்தாராம்.

விருந்திற்குப்பின் பம்பாய் மாநில கவர்னர் பிரகாசா ஓர் சிற்றுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இந்த விருந்துக்கு வந்துள்ள ஜெர்மானியாருக்கு 'நல்ல ஜெர்மன் பீர்' தரமுடியாதது குறித்து வருந்துகிறேன். இத்தகைய விழாவில் ஜெர்மன் நாட்டு விருந்தினர்கள் என்ன விரும்புவார்கள் என்பதற்கு, தொடப்படாமலும் கவனிக்கப்படாமலும் மேசைகளின் மீது தேங்கிக்கிடக்கும் தண்ணீர் குவளைகளே போதிய சான்றாகும்.

"நாம் மதுவிலக்கு செய்யப்பட்ட நாட்டில் இருப்பது மிகவும் துர்ப்பாக்கியம். விருந்தில் மதுவைப் (பீர்) பங்கிடமுடியாது. எண்ணற்ற கூஜாக்கள் நிறைய மதுவைப் பரிமாறவேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு; ஆனால் சட்டம் குறுக்கிடுவதால் என் ஆசையை நிறைவேற்றமுடியவில்லை."

தி. மு. க. சட்டசபைக் கட்சிக் கூட்டம்

"28-4-57 காலை 10-மணிக்கு சென்னையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் இல்லத்தில் ('அஞ்சுகம்' எண் 7. ஏ., தெற்குக் கோபாலபுரம் 4-வது தெரு, சென்னை-6) தி. மு. க. சட்டசபைக் கட்சிக் கூட்டம் நடைபெறும்"

என்று, தி. மு. க. சட்டசபைக் கட்சிச் செயலாளர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

கவர்னர் செலவுகளை பரிசீலிப்பதில்லையாம்!

மோசடி ஒரு தொடர்கதையாம்

கல்கத்தா, ஏப். 19—

மேற்குவங்க கவர்னர் மாளிகையில் அவருடைய அலுவல்களைக் கவனிக்க ஒரு செயலகம் உள்ளது.

கவர்னரின் செலவுகளை இதற்குமுன், சரிபார்த்து தணிக்கைச் செய்யும் பழக்கமே இருந்ததில்லையாம்!

இந்த ஆண்டில், அதிகாரிகளின் உத்தரவுப்படி கவர்னரின் செலவுகளைத் தணிக்கை செய்துள்ளனர்.

சுமார் ஒரு இலட்சம் ரூபாய் கையாளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறதாம்.

செலவிற்கென எடுக்கப்பட்ட தொகைகள் எவ்வாறு—எதற்கு செலவிடப்பட்டது என்ற கணக்கு காணப்படவில்லையாம்!

இத்தகைய ஒழுங்கீனம், கடந்த ஆண்டுகளில்கூட காணப்படுகிறதாம்.

காங்கிரஸ் காரியதரிசி விலகிக்கொண்டார்!

காரணம் பற்றி விளக்கம்

திருவனந்தபுரம், ஏப். 19—

கேரளத்தில் காங்கிரஸ் நிறுவனத்தைப் பலப்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்துவதற்காக காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே. பி. மாதவன் நாயர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துவிட்டாராம்.

சோஷலிஸ்டுக் கட்சி செயலாளர் விலகினார்

ஐதராபாத், ஏப். 19—

இந்திய சோஷலிஸ்டுக் கட்சியின் பொதுச்செயலாளரான பிபின் பால்தாஸ் பதவியிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோழிக்கோடில் இரும்புக் கனிப்பொருள்!

கோழிக்கோடு, ஏப். 19—

கோழிக்கோடிலிருந்து பாலுசேரி செல்லும் பாதையில் 12 மைல் தூரத்திலுள்ள நடுவல்லூரில் ஒருவிதமான கற்கள் கிடைப்பதாகவும், அந்தக் கற்களில் இரும்புக் கனிப்பொருள்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

நம் நாடு

சென்னை 20—4—57 சனி

செய்யப்போவது என்ன?

ஆட்சி எதுவாக இருந்தாலும், கிராம அதிகாரிகள் ஆட்சியின் முதுகெலும்பு போன்றவர்களாவர். கோட்டையிலிருந்து பிறப்பிக்கப்படும் கட்டளை எதுவானாலும், அவை அனைத்தையும் திறம்படச் செயலாற்றும் பொறுப்பு அக்கிராம அதிகாரிகளையே சார்ந்திருக்கிறது.

அக்கிராம அதிகாரிகள் தரும் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டுதான், கோட்டை அதிகாரிகள் மேற்கொண்டு செயல்முறைகளை உருவாக்கிக் கொள்ளவேண்டும். கிராம அதிகாரிகள், தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பைத் திறம்படச் செயலாற்றத் தவறிவிடுவார்களேயானால், அதன் விளைவு கிராம அளவுடன் நின்றுவிடாது. கோட்டை அதிகாரிகளையும் குழம்பச் செய்துவிட்டு, டில்லி ஆதிபத்தியத்தையும் கதிகலங்கச் செய்துவிடும்.

கிராம அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு, கோட்டை அதிகாரிகள் கொண்டுள்ள பொறுப்புடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மிகமிகச் சாதாரணமானதாகத்தான் தென்படக்கூடும். ஆனால், மொத்த கிராம அதிகாரிகளும் தனித்தனியாக ஆற்றிவரும் பொறுப்பான பணியின் ஒட்டு மொத்தம்தான் கோட்டை அதிகாரிகளின் பணியாகும்.

கோட்டையில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்களின் அதிருப்திக்கு ஆளான ஆட்சியாளர்கள், இறுதியாகப் பெரும் அல்லல்களுக்கு ஆளாகவேண்டியக் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதுபோன்றே, கிராம அதிகாரிகளின் அதிருப்தியின் காரணமாக அவ்வரசாங்க ஊழியர்களும் பரிகரிக்க முடியாதத் தொல்லைகளுக்கு ஆளாகவேண்டியதாகிவிடும். அதுவுமன்றி, ஆட்சியாளர்களுக்கும், கிராம அதிகாரிகளின் அதிருப்தியால் ஆபத்து ஏற்படுவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

கோட்டையில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்களும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு நாடுமுழுதும் பரவலாக இருந்துப் பணியாற்றிவரும் அரசாங்க ஊழியர்களும், தாங்கள் ஆற்றிவரும் பணியைப் பொறுத்தவரையில் கிராம அதிகாரிகளையே எதற்கும் நம்பி வாழவேண்டியவர்களாவார்கள். அந்தவகையில்தான் அரசாங்க இயந்திர அமைப்பு முறை உருவாக்கி அமைக்கப்பட்டு இருக்கின்றது.

உயர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு, பொது மக்களை நெருங்கிப் பழகுவதற்காக இருந்துவரும் வாய்ப்பைவிட, சாதாரண மக்களிடம் தொடர்பு கொள்வதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. தெளிவாகச் சொல்லவேண்டுமானால், குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதி மக்களுக்குள்ளும் மக்களாக இருந்து நாள் முழுவதும் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருப்பவர்கள் கிராமாதிகாரிகள் ஆவர் எனக் கூறுவது மிகையாகாது.

எடுத்துக்காட்டாக, ஒரு கிராமத்தில் பயிராக்கப்படக்கூடிய நஞ்செய் புஞ்செய் நிலப் பரப்பின் அளவு, அதில் குறிப்பிட்ட ஆண்டில் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பின் மதிப்பு, பட்டுப்போன மரங்கள்--பச்சையாக இருக்கும் மரங்கள் இவ்வளவையும் குத்து மதிப்பாகக் கூறாமல், திட்டவட்டமான எண்ணிக்கையில் கூறக்கூடிய பொறுப்பில் இருந்துவருகின்றவர்கள் கிராம அதிகாரிகளாவர். எனவே, அவர்களை அதிருப்தி இல்லாதவர்களாக பார்த்துக் கொள்ள வேண்டியது ஆட்சியாளர்களின் தலையாய கடமை என்பதை நாம் சொல்லாமலே எவரும் உணர்ந்துகொள்ள முடியும்.

கிராமாதிகாரிகள் நீண்டகாலமாகவே, தங்களுடைய ஊதியத்தை உயர்த்தவேண்டும் என முழுமூச்சுடன் வற்புறுத்தி வந்தவண்ணம் உள்ளனர். எல்லாவற்றிலும் இருப்பது போலவே, இவர்கள் கோரிக்கை விஷயத்திலும் அரசாங்கம் அலட்சியமாகவே இருந்துவருகிறது.

கிராம கருணிகர் சங்கத்தின் பிரதிநிதிகள் முதலமைச்சரைச் சந்தித்து, தங்கள் தேவைகளை விளக்கிக் கூறியுள்ளனர். அதுவுமன்றி, சிற்சில இடங்களில் இருந்துவரும் கருணிகர் சங்கங்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளன.

குறிப்பிட்ட கால அளவுடன் அவர்கள் பணி முற்றுப்பெற்றுவிடுவது கிடையாது. அவர்கள் அனைவரும் முழு நேரப் பணியாளர்களாகவே பணியாற்றிவருகின்றனர்.

அவர்கள் ஆற்றவேண்டிய பணியும் விரிந்துகொண்டே போகிறது. ஆட்சியாளர் போடுகின்ற திட்டம் உருப்படாததும் வெறும் விளம்பரமானதாகவும் இருந்தாலும், அதன் முழுச் சுமையும் அவர்கள் தலையிலேயே விழுந்துவிடுகிறது.

ஆனால், பணியின் அளவு கூடுதலாகின்ற அளவுக்கு, அவர்களுடைய ஊதியம் பெருகுவது கிடையாது. பணியின் சுமையைக் கூட்டிக்கொண்டே வருகின்ற ஆட்சியாளர்கள், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமே என கனவிலும் கருதுவது கிடையாது.

அவர்கள் இப்பொழுது விலைவாசி உயர்வுப் படியுடன் ரூ. 23-க்கு மேல் அவர்களுடைய மாதாந்திர ஊதியம் இருக்கவில்லை. ஏழைக் குடும்பம் எப்பொழுதும் எண்ணிக்கையில் கூடியிருக்கும் என்பதைச் சொல்லவே தேவை இல்லை.

மிகக்குறைவான ஊதியத்தை வைத்துக்கொண்டு, கிராம கருணிகர்கள், பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்துவருகின்றனர். நியாயமாகக் கிடைத்துவரும் வருமானத்தைக்கொண்டு குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது போகின்றபொழுது, வருவாய் பெருக்கத்திற்காக அவர்கள், தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட வேறுதுறைகளை நாடித்தானே செல்வர்?

எனவே, கிராம அதிகாரிகளான கருணிகர் குறையை உடனடியாக நிவர்த்திக்க ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும். அவர்கள் நியாயமான குறைபாட்டை அரசாங்கம் களைய முன்வருவதின் மூலம், சமூகத்தில் பரவலாகப் பற்றிக்கிடக்கும் ஒழுக்கக்கேட்டையும் கணிசமாகக் களைவது சாத்தியமாகும். ஆட்சியாளர் செய்யப்போவது என்ன?

அரசியல் சட்ட வரம்பை அம்பலமாக்குவராம்!

சோஷலிச சமுதாயம் உருவாக செய்யப்போவதென்ன ?

சென்னை, ஏப். 19—

“சோஷலிச நாடாக மாறுவதற்குத் தற்போது தடையாக உள்ள இந்திய அரசியல் சட்டத்தின் வரம்புகளை அம்பலப்படுத்தவே கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி பதவி ஏற்றுக்கொண்டது” என்று, சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில், கம்யூனிஸ்டு பி. இராமமூர்த்தி கூறியுள்ளார்.

“உண்மையான சோஷலிச சமுதாயம் உருவாக இந்திய அரசியல் சட்டத்தை மத்திய அரசாங்கம் மாற்றி அமைக்க வேண்டிய தன் அவசியத்தை கம்யூனிஸ்டுக் கட்சி வற்புறுத்தும்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரூ. 30 கோடி செலவில்!

பஞ்சாப் மலைப் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிக்கத் திட்டம்

தர்மசாலா, ஏப். 19—

பஞ்சாபைச் சேர்ந்த காங்கரா மாவட்டத்தின் ஷிவாலிக் மலைப் பிராந்தியப் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிப்புக்கான திட்டம் ஒன்று மாநில கவர்னரால் ஆரம்பித்து வைக்கப்படும். இதற்கு மொத்தம் ரூ. 30 கோடி செலவாகுமென்று தெரிகிறது.

முதன் முதலில் நிலத்தைத் துளைத்துச் சென்று ஆராய்ச்சி நடத்தத் திட்டமிட்டிருக்கும் இடம் சுமார் 3,000 அடி உயரத்தில் இருக்கிறது. இங்குள்ள பாறைகள் அப்புறப்படுத்தப்பட்டு பூமி ஒரு மட்டத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்த எண்ணெய் கண்டுபிடிப்பு வேலையில் ருமேனிய நிபுணர்கள் பங்கு கொள்கின்றனர்.

டாடா தொழிற்சாலைக்கு 950 இலட்சம் டாலர்?

உலகப் பாங்கி தரும் கடனுதவி

நியூயார்க், ஏப். 19—

இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்கு உலகப் பாங்கி செய்துள்ள உதவியில் தனிப்பட்ட எஃகுத் தொழிற்சாலைகளுக்கு அதிக உதவியளிக்கப்பட்டுள்ளதாம்.

இந்த வகையில் 950 இலட்சம் டாலர் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளதாம்; இதனால் டாடா தொழிற்சாலையில் ஒரு இலட்சம் டன் எஃகு அதிகமாக உற்பத்தியாகுமாம்.

ஆந்திரத்திற்கு டில்லியின் உதவி

1956-57-ம் ஆண்டிற்கு நாகார்ஜுனசாகர் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் ரூ. 156 இலட்சம் கடனுதவி யளித்துள்ளது.

இத்துடன் இந்தத் திட்ட நிர்மாணச் செலவிற்கு மொத்தம் ரூ. 507 இலட்சம் ஆந்திர அரசு பெற்றுள்ளது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பு

தமிழருக்குப் பெருமையும் நன்மையும் தருவதாகும்

கருத்துடன் மாணவர்கள் கற்க வேண்டுகோள்

இணைப்பு மருத்துவக் கல்லூரி இலக்கியத் தமிழ்ப் பகுதி விழாவில்

காஞ்சி-கல்யாணசுந்தரம், கா. அப்பாதுரை, கண்ணதாசன் ஆகியோர் கருத்துரை

“மற்ற முறைகளைவிட சித்த வைத்தியத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. மேனாட்டு முறையில் உலோகங்களும் மூலிகைகளும் திரவமாக்கப்படுகின்றன. யுனானி முறையில் லேகியங்களும், ஆயுர்வேத முறையில் நெய்களும் பட்டைத் தாள்களும் உண்டு. இவைகள், ஒரு குறிப்பிட்ட காலம் கடந்தபின், உபயோகப் படுத்தும் தகுதியை இழந்துவிடுகின்றன. ஆனால் சித்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்படும் பஸ்பமோ செந்தூரமோ எப்போதும் கெடுவதில்லை. நாட்கள் அதிகம் ஆகஆக அவற்றின் தரமும், குணமும் அதிகரிக்கின்றன”

என்று, சென்னை அரசினர் இணைப்பு மருத்துவக் கல்லூரி கலை இலக்கியக் கழகத் தமிழ்ப்பகுதியின் ஆண்டு இறுதிக் கூட்டவிழாவில் பேசுகையில் தோழர் காஞ்சி—கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது :—

“மக்களுக்கு மகத்தான நன்மை செய்யும் மருத்துவ துறையைச் சேர்ந்த மாணவர்கள் கலை இலக்கியத்தையும், மருத்துவக் கல்வியையும் ஒருசேர ஊக்கத்துடன் வளர்க்கவேண்டும்

“மேனாட்டு மருத்துவ முறையுடன் சித்த வைத்தியம், யுனானி, ஆயுர்வேத வைத்தியங்களையும் இணைத்துக் கற்பிக்கும் இக்கல்லூரி தமிழ் மக்களுக்கு மிகவும் பயனுடையதாகும். சித்த வைத்திய முறையைக் கற்பிக்கும் கல்லூரி இந்தியாவில் இது ஒன்றுதான். மற்ற முறைகளுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழரது சித்த வைத்தியம் மிகச் சிறந்தது-தொன்மை வாய்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

உலோகங்களையும், வெள்ளைப் பாஷாணம் போன்ற கொடும் நஞ்சுகளையும் மருத்துவ முறையில் மற்ற எந்தத் துறையினரையும்விட முதன்முதலில் சித்த வைத்தியம்தான் கையாண்டது. உலகப் பெரும்போருக்குப் பின்தான் நஞ்சினையும் மருந்தாகப் பயன்படுத்தும் முறையினை ஜெர்மானியர் கண்டுபிடித்துக் கையாண்டனர்.

“தமிழர்கள் சிக்கனமாக அவ்வப்போது சித்த முறைமூலம் தக்க மருந்து செய்து கொள்ளலாம்; இத்துறை தமிழருக்குப் பெருமையும் நன்மையும் தருவதாகும். இதனை மாணவர் கருத்துடன் கற்றுப் போற்றிப் பரப்ப வேண்டும்.

இந்திய முறை மருத்துவக் கல்லூரி ஏற்படக் காரணமாயிருந்து பாடுபட்டவர்களான பனகல் அரசர், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், கைவல்யசாமியார், டாக்டர் நஞ்சுண்ட ராவ், டாக்டர் நடேச முதலியார் சர். பி. டி. தியாகராயர் ஆகியோரது சேவை என்றென்றும் நிலைபெறும் வண்ணம் கல்லூரி மாணவர்கள் சிறந்து விளங்கவேண்டும்.”

கா. அப்பாதுரையார்

பன்மொழிப் புலவர்கா. அப்பாதுரை அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது :—

“இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமிழ்க்கலை, இலக்கியத் துறையில் ஈடுபட்டு பாடுபட்டுவருவது தமிழரது மறுமலர்ச்சிக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

“உலகில், மருத்துவ முறையில்தான் முதன்முதலாக அறிவு வளர்ச்சி ஏற்பட்டது, டாக்டர் ஹக்கீம், பண்டிதர் என்ற பட்டங்களும்—பாராட்டுகளும், அடைமொழிகளும் மருத்துவருக்கு அளிக்கப்படும் சிறப்புச் சொற்களாகும். இதைத் தொடர்ந்துதான் சட்டம், மொழி, விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளின் வல்லுநருக்கும் இப்பட்டங்கள் வழங்கப்பட்டன.

“மருத்துவத்துறையில் தமிழகம் முதலிய எல்லா கீழ்த் திசை நாடுகளும் வெகு காலத்திற்கு முன்பே சீரும் சிறப்பும் பெற்றிருந்தன; ஆனால், இன்று மேனாட்டார்தான் பெரிதும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இதற்கு மொழி ஆர்வமும், அரசியல் விழிப்பும் இல்லாமையே முக்கியக் காரணமாகும்.

“தனித்த அரசியல் உரிமையும் மொழி உணர்ச்சியும் கலைப் பற்றும் இருந்தால்தான் எந்தத் துறையிலும் முன்னேற்றம் காண முடியும். தமிழர் அரசியல் விழிப்புடன்கூடிய மொழி உணர்ச்சி பெற்றால் எல்லாத் துறையிலும் சிறப்புற வாய்ப்பும் வசதியும் பெறமுடியும்.”

கண்ணதாசன்

தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இன்றையத் தமிழர்கள் தங்களது பழம் பெருமைகளையும், சிறந்த முன்னாள் இலக்கியங்களையும் நினைத்துக் கனவு காண்பதுடன் நிற்காது. இன்றைய நிலைக்கேற்ற சிறந்த வாழ்க்கை இலக்கியங்களை உண்டாக்கப் பாடுபடவேண்டும்.

“தமிழ் இலக்கியமும், கலையும் தமிழ்ப் பண்புடன் திகழ வேண்டும்.

“மலையாளம், வங்காளம், மராத்தி முதலிய மொழிகளைப் போன்று வாழ்க்கை இலக்கியங்கள் அதிகம் தமிழில் தேவையாகும்.”

வரதட்சணை பெறும் அரசாங்க ஊழியர்கள்

டில்லியின் சுற்றறிக்கை

புதுடில்லி, ஏப். 19—

மத்திய ஆட்சியினர் அரசாங்க ஊழியர்களுக்கு அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கையில் வரதட்சணை கொடுப்பது பற்றியும், பெற்றுக் கொள்வது பற்றியும் விளக்கம் காணப்படுகிறது.

வரதட்சணை நன்கொடை போன்றது என்றும், எனவே அதை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க அனுமதி தேவையில்லை என்றும் அதில் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், வரதட்சணை பெற்றுக் கொண்டதை மட்டும் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டுமாம்.

அரசாங்க ஊழியர்கள் சார்பாக அளிக்கப்பட்டாலும் அது பற்றி தெரிவிக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வரதட்சணைத் தொகையிலிருந்து நகைகள், அசையாப் பொருள்கள் வாங்கினாலும் தெரிவிக்கவேண்டுமாம்.

‘இராசிபுரம் நகரசபைத் தலைவரின் உறுப்பினர் தேர்வு செல்லாது’

மறுதேர்தல் நடத்துமாறு உத்தரவு

நகரமன்றத் தேர்தல் ஆட்சேபணை வழக்கில் தீர்ப்பு

சேலம், ஏப். 20—

“இராசிபுரம் நகரமன்றத் தலைவர் ஜி. கிருஷ்ணன் அவர்கள் நகரமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது; அதற்குப் பதில் மறுதேர்தல் நடத்தவும்,”

என்று, தேர்தல் ஆட்சேபணை மனுவின் தீர்ப்பில் தேர்தல் ஆணையாளரும், உதவி நீதிபதியுமான ஹம்மப்பா 18-ந் தேதி அன்று தீர்ப்புக் கூறியுள்ளார்.

இந்தத் தீர்ப்பின் பயனாக. ஜி. கிருஷ்ணன் அவர்கள் இராசிபுரம் நகரசபைத் தலைவர் பதவியையும் இழக்கிறார்.

தேர்தல்

இராசிபுரம் நகரசபைக்கு சென்ற 10—10—55ல் தேர்தல் நடைபெற்றது.

இராசிபுரத்தில் 9-வது வார்டில் ஜி. கிருஷ்ணன் சுயேச்சை அபேட்சகராகவும், ஏ. செல்லமுத்து உடையார் காங்கிரஸ் அபேட்சகராகவும் போட்டியிட்டனர்.

ஜி. கிருஷ்ணன் 252 வாக்குகள் பெற்று உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், 250 வாக்குகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் செல்லமுத்து உடையார் தோல்வியடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நகரசபைத் தலைவரானார்

வெற்றியடைந்ததாக அறிவிக்கப்பட்ட ஜி. கிருஷ்ணன் அவர்கள், பின்னர் இராசிபுரம் நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்ற தடவையும் ஜி. கிருஷ்ணன் இராசிபுரம் நகரசபைத் தலைவராக இருந்தார்.

ஆட்சேபணை மனு

ஜி. கிருஷ்ணன் இராசிபுரத்தில் 9-வது வார்டில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஏ. செல்லமுத்து உடையார் (காங்கிரஸ் அபேட்சகர்) சேலம் சப்-கோர்ட்டில் தேர்தல் ஆட்சேபணை மனுவைத் தாக்கல் செய்தார்.

அந்த ஆட்சேபணை மனுவில் செல்லமுத்து உடையார் கூறியிருந்ததாவது :—

“2 ஓட்டுகள் டெண்டர் ஓட்டுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன; அந்த 2 டெண்டர் ஓட்டுகளையும், எண்ணும்போது சேர்த்துக் கொள்ளப்படவில்லை; சேர்த்து எண்ணியிருந்தால் அவ்விரண்டு ஓட்டுகளும் எனக்குக் கிடைத்திருக்கும். அதன் பிறகு என்னுடைய (செல்லமுத்து உடையாருடைய) ஓட்டுகள் 252-ஆக இருந்திருக்கும். ஜி. கிருஷ்ணனும் அதே ஓட்டுகள் வாங்கி இருந்ததால் இருவரின் ஓட்டுகளும் சம எண்ணிக்கையாகின்றன. திருவுளச் சீட்டு போட்டு குலுக்கி, வெற்றி பெற்றவரை அறிவித்து இருக்கலாம். ஆகவே, ஜி. கிருஷ்ணனின் தேர்தலை செல்லாதென்று அறிவிக்கவும்.”

‘டெண்டர் ஓட்டுகள் இரண்டையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளாமல் இருந்தது சரியல்ல’ என்று காரணம் கூறி, நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார். (ந. நி.)

மாமல்லபுரத்தில் உப்பு உற்பத்தி

இந்திய அரசாங்கமே ஏற்று நடத்துமாம்!

சென்னை, ஏப். 19—

சென்னை மாநிலத்தல் ஆத்துக்குடி கடற்கரைப் பகுதியில் 85-ஏக்கர் நிலத்தில் உப்பு உற்பத்தி செய்யப்படுவது தெரிந்ததேயாகும்; ஆனல் இது, தனியார் துறையின்கீழ் நடத்தப்படுகிறது.

இப்போது, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மாமல்லபுரத்தில் சுமார் 100 ஏக்கர் நிலத்தில் உப்பு உற்பத்தி செய்வதற்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கம் ஏற்று நடத்த முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதற்கு மொத்தம் ரூ. 2½-இலட்சம் செலவிடப்படும் என்று தெரியவருகிறது.

சென்னையில் தென் மண்டலக்குழுக் கூட்டம்

மே 5-ந் தேதி நடைபெறும்

சென்னை, ஏப். 19—

தென்மண்டலக் குழுவில் ஆந்திரம்—சென்னை—கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் பிரதிநிதிகள் இடம் பெறுவர் என்பது தெரிந்ததேயாகும்.

இந்தக் குழுவின் முதல் கூட்டம் வரும் மே 5-ந் தேதி சென்னையில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்திற்கு மத்திய அமைச்சர் பண்டித பந்த் தலைமைவகிக்கக்கூடும்.

இந்த கூட்டத்தில் எல்லைத் தகராறுகள் தீர்த்துவைக்கப்படுமா என்பதைப்பற்றி எதும் தெரியவில்லை.

தென் மண்டலக்குழு கூடுவது இதுதான் முதல் முறையாதலால், கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் இதுவரையிலும் வகுக்கப்படவில்லையாம்.

பள்ளி நிர்வாகிகள் முடிவு

அமைச்சர்களைப் பேட்டி காண்பர்

சென்னை, ஏப். 19—

சென்னையிலுள்ள ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகிகள் கூட்டம் தோழர் வீராகவன் தலைமையில் நடைபெற்றபோது, மாணவர்களுக்கு அளிக்கப்பீடும் முழுச்சம்பள சலுகையினல் நிர்வாகிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய அரசாங்கம் முன்வரவேண்டுமென்றும், கல்வி அமைச்சரையும் முதலமைச்சரையும் நேரில் கண்டு இக்கோரிக்கையை வற்புறுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

‘குடிசைத் தொழிலாக மாறிவிட்டதே!’

கள்ளச்சாராயம் காய்ச்சுவது பற்றி நீதிபதி குறிப்பு

“சென்னை—செங்கற்பட்டுக்கு இடையே எல்லைப் பகுதிகளில் கள்ளச்சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாகிவிட்டதென்பது உண்மைதான்; ஆனல், அது சட்டபூர்வமான தொழிலல்லவே!

“ரிவிஷன் மனுவில், மனுதாரருக்குச் சிறை தண்டனை விதிப்பதால் அவரது குடும்பமே நாதி இழந்துவிடும் என்று கூறப்படுகிறது; ஆனல் அதற்காக எதிரியின் செய்கையை ஆதரிக்கமுடியுமா? சட்டபூர்வமான தொழிலொன்றை அவர் தேடிக்கொள்ள வேண்டும்; அப்படி செய்ய வேண்டுமென்றுதான் அவரது குடும்பத்தினரும் வற்புறுத்தவேண்டும்; கள்ளச்சாராயம் காய்ச்சுபவராக அவர் நீடிக்கமுடியாது. ஆகவே, அவரைத் தண்டித்ததும் சரி; அவருக்குக் கொடுத்த தண்டனையும் சரி”

என்று, கள்ளச்சாராயம் கொண்டுவந்ததாக மதுவிலக்குச் சட்டப்படி 2 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரது அப்பில் மனுவை நிராகரித்து, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. பி. என். இராமசுவாமி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆசிரியைகள் மீது குற்றச்சாட்டு

விபரீத எண்ணங்களைத் தூண்டுகின்றனராம்!

இளைஞர்களுக்குக் கல்வியறிவூட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உயர்தரப் பள்ளி ஆசிரியைகள் நால்வர், இறுக்கமான கால்சட்டையை முழங்கால் வரையில் அணிந்து கொண்டு வகுப்புகளை நடத்தி வந்ததால், பள்ளியின் டைரக்டர் அதற்குத் தடை விதித்தாராம். ஆனல், நான்கு ஆசிரியைகளும் அவரது தடையை மதிக்காது பிடிவாதம் செய்ததால், கல்வி அதிகாரிக்கு புகார் செய்யப்பட்டதாம். கல்வி அதிகாரி ஆசிரியைகளை இவ்வாறு குழப்பம் செய்ய வேண்டாமென்று எச்சரித்ததுடன், ‘உடல் பருத்த ஆசிரியைகள் விபரீதமாக உடையணிந்து வருவதால் மாணவர்களின் சிந்தனைகள் சிதறுகின்றன’ என்றும், ‘வகுப்புகளின் கட்டுப்பாடு நிலைகுலைந்துவிடும்—ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்த முடியாமற் போய்விடும்,’ என்றும் குறிப்பிட்டாராம்.

மதுரையில் பேராசிரியர் அன்பழகன்

பாராட்டு - வரவேற்புப் பொதுக்கூட்டம்

8—4—57 இரவு 7 மணியளவில் மதுரை திலகர் திடலில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களை வரவேற்றும்—பாராட்டியும் தோழர் எஸ். முத்து தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைமை வகித்த தோழர் முத்து அவர்கள், கம்யூனிஸ்டுகளின் காலித்தனத்தைக் கண்டித்தும், அச்செயல்களிலிருந்து தப்பிப் பிழைத்த தோழர்களையும், அவர்களுக்கு நேர்ந்த படுகாயங்களையும் காட்டினர்; ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையான தோழர் மீனாட்சிசுந்தரத்தை மக்களுக்குப் படுகாயத்தோடு அறிமுகப்படுத்தியபோது மக்கள் கண்ணீர்வடித்துத் தங்கள் அனுதாபத்தைக் காட்டினர்.

இந்நிகழ்ச்சிக்குப் பின், தோழர் முத்து அவர்கள் வெற்றி பெற்ற பேராசிரியர் க. அன்பழகனைப் பாராட்டி சிறிது நேரம் பேசினர்.

அடுத்துப் பேசிய தோழர் க. அன்பழகன் அவர்கள், பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, நாட்டில் உள்ள அரசியல் நிலையைத் தெளிவாக்கினர்.

பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் அரசுக்கண்ணன் வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

பின், பேராசிரியருக்கு தியாகராசர் கல்லூரி மாணவர்கள், இராசபாளையம் சுப்பையா வித்தோ ஒர்க்ஸ்—கைவண்டித் தொழிலாளர்கள்—ரிக்ஷா வண்டித் தொழிலாளர்கள் — சலவைத் தொழிலாளர்கள்—நெல்லூர் சரசுவதி கைத்தறி நெசவாளர் சங்கத் தொழிலாளர்கள்—தி. மு. கழகக் கிளைகள் ஆகியவற்றின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தனக்களிக்கப்பட்ட கைத்தறி துணிகளை தோழர் க. அன்பழகன் அவர்கள் ஏலத்தில்விட்டு கிடைத்த தொகை முழுவதையும் காயமுற்ற தோழர்களுக்கான உதவி நிதியில் சேர்த்தார்.

தி.மு.கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு வதியம் ஊராண்மைக் கழக வரவேற்பு

பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் உள்ளிட்ட

குளித்தலை அடுத்த வதியம் கிராம ஊராண்மைக் கழகத்தவர், தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்தை ஒட்டி, குளித்தலைக்கு வருகைதந்த பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், மற்றும் அண்ணாஉள்ளிட்ட வெற்றி பெற்ற எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்களுக்கு 14—4—57 மாலை 6-30 மணியளவில் ஒரு வரவேற்பு அளித்தனர்.

ஊராண்மைக் கழக உறுப்பினர்களும், தலைவரும், தி. மு. கழக சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகியோருக்கு ஒரு தேநீர் விருந்து தந்தனர்.

பின்னர் தலைவர் தி. வீ. முத்துசாமி அவர்கள், அனைவருக்கும் வதியம் ஊராண்மைக் கழகச் சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளித்து மகிழ்ந்தார்.

அண்ணா நன்றி

வரவேற்பு அளிக்கப்பட்ட அனைவரின் சார்பாக அண்ணா அவர்கள், நன்றி தெரிவித்துப் பேசினர்கள்.

வரவேற்பு விழா அத்துடன் முடிவுற்றது. (ந-நி.)

சென்னை சட்டசபைத் தலைவர் தேர்தல்

சென்னை, ஏப். 18—

சென்னை சட்டசபைத் தலைவர் தேர்தலும், துணைத் தலைவர் தேர்தலும் ஏப்ரல் 30-ந்தேதி நடைபெறும்.

தற்காலிகத் தலைவராக உள்ள பக்தவத்சலு நாயுடு அவர்கள் தலைவர் தேர்தலை நடத்தி வைப்பார்; துணைத் தலைவர் தேர்தலை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் நடத்திவைப்பார்.

கூட்டுத்தொகுதிமுறை அமுலாகுமாம்!

கராச்சி, ஏப். 19—

பாகிஸ்தான் முழுமையிலும் கூட்டுத் தொகுதி முறையை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதற்காகத் தற்போதுள்ள தேர்தல் தொகுதிச் சட்டத்தை திருத்துவதற்கு மசோதா ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறதாம்.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை

தனியார் துறையில் கோரிக்கை

சேலம், ஏப். 18—

கோவையில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க தனிப்பட்ட நிறுவனத்திற்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் அல்லவா?

அதேபோல், சேலத்திலும் ஒரு இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்க தனிப்பட்ட பிரமுகர் ஒருவர் மத்திய சர்க்கார் கனரகத் தொழில் அமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளார்.

இதற்கு இந்தியப் பேரரசு, கூடிய சீக்கிரத்தில் அனுமதி வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பேரரசின் அனுமதி கிடைத்தவுடன் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். (ந-நி.)

ஊதியத்துடன் ஒரு வாரம் ஓய்வு!

ஆலைகளில் பணியாற்றுவோர் நலனுக்கென சட்டம் அமுல்

நியூயார்க் நகரம் ஆலைகளுக்குப் பெயர் பெற்றது. அங்குள்ள ஆலைகளில் பணியாற்றுவோர் பெரும்பாலும் இருதய நோய், புண் முதலியவைகளால் பீடிக்கப்படுகின்றனர். எனவே, அந்த ஆலைகளில் பணியாற்றுவோரின் உடல் நலனுக்காக ஒரு புதிய சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

ஆலைகளில் நீண்ட காலமாகப் பணியாற்றி வருபவர்கள், எழு வார உழைப்புக்குப் பிறகு ஒரு வாரம் அவசியம் ஓய்வுபெற வேண்டும் என்றும், மற்ற ஊழியர்கள் ஆண்டில் இரண்டு வாரங்கள் அவசியம் ஓய்வு பெறவேண்டும் என்றும் அந்தச் சட்டம் கூறுகிறது.

இந்த ஓய்வுபெறும் காலத்தில் அனைவருக்கும் ஊதியம் தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதச் சோதனைகள்

இரு வாரங்களில் ஐந்து தட்டவை ரஷ்யா நடத்தியதாம்!

லண்டன், ஏப். 19—

செவ்வாய்க்கிழமையன்றும் மற்றுமோர் அணு ஆயுதச் சோதனையை ரஷ்யா நடத்தியதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற இரு வாரங்களில் 5வது முறையாக ரஷ்யா அணு ஆயுதத்தை வெடித்துள்ளதாம்.

இந்தச் சோதனை மிகப் பெரியது என்று வாஷிங்டன் செய்தி ஒன்று கூறுகிறது.

சப்பானில் தேசிய வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் அசாதாரணமான நில நடுக்க அலைகள் பதிவாகியுள்ளதாக டோக்கியோ செய்தி அறிவித்துள்ளது.

அணு ஆயுத சோதனை

தற்காப்பை முன்னிட்டே ரஷ்யா செய்கிறதாம்!

இலண்டன், ஏப். 18—

ஐ. நா. ஆயுதக் குறைப்புத் துணைக் குழுவின் கூட்டம் இலண்டனில் நடைபெற்று வருகிறது.

அதில் ரஷ்யப் பிரதிநிதியாக கலந்துக் கொண்டுள்ள உதவி அயல் நாட்டு அமைச்சர், தனது பாதுகாப்பை முன்னிட்டே தற்போது ரஷ்யா அணு ஆயுத சோதனைகளை நடத்திவருவதாகக் கூறியுள்ளார்.

‘அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் உடன்பாடு ஏற்பட்டவுடன் ரஷ்யா அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்திவிடும்’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார வெட்டு விலக்கு

சென்னை, ஏப். 19—

உதகை, குன்னூர், கோத்தகிரி, கொடைக்கானல் ஆகிய மலைப் பகுதிகளிலுள்ள கைத்தொழில் அல்லாத மின்சார உபயோகிப்பாளருக்கு மின்சார வெட்டிலிருந்து அரசாங்கம் விலக்களித்துள்ளது. இந்த விலக்கு இந்த ஆண்டு ஜூன் 30-ந் தேதி வரை நீடிக்கும்.

பெங்களூரில்

‘நம் நாடு’ கிடைக்குமிடம்

ஜி. டி. சண்முகம்
எண்-11, பாரதி விலாஸ்,
2-வது சந்து
சிவன்செட்டி கார்டன்,
பெங்களூர்-1.

பொதுவுடைமையர் ஆசை நாட்டிற்கு நாடு தாவிச் செல்லும் விந்தை!

நோய் ஒன்றிருக்க மருந்தொன்று தரும் டாக்டர்கள் நிலையில் உள்ளனர்

தோழர் சி. பி. சிற்றரசு ஆராய்கிருர்

11—4—57-ல் கோவை—பாபநாய்க்கன் பாளையம் தொழிலாளர் பகுதியில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"இங்கே பொதுவுடைமைத் தோழர்கள் நிரம்பியிருக்கிருர்கள்; அவர்களுக்கு நல்ல விளக்கம்தர வேண்டுமென்று செயலாளர் கேட்டுக்கொண்டார்; அதன்படி பொதுவுடைமை நண்பர்களின் சிந்தனைக்கு சில விளக்கங்கள் தர எண்ணுகிறேன்.

"முதலாவது, அவர்களுடைய முற்போக்குக் கொள்கையிலிருந்து நாம் முற்றிலும் வேறுபட்டவர்கள் என்று அவர்கள் நினைக்கிருர்கள்; அது எந்த வகையில்? நாடு தனியாகப் பிரிய வேண்டும் என்றுகூறுகிருேமாம்! அவர்களுக்கு நாட்டாசை இல்லாமலா இருக்கின்றது? முதலில் அவர்களுக்கு மாஸ்கோமீது ஆசை இருந்தது; பிறகு அந்த ஆசை சினத்தின்மீது தாவிற்று; இப்போது கேரளத்துக்குக் குடி புகுந்துவிட்டது.

"மார்க்சிய சித்தாந்தம் மண்டலங்களெல்லாம் பரவவேண்டுமென்று நினைப்பவர்கள், மண்டலங்கள் அனைத்தையுமே ஒரே மாதிரி மதிக்கின்ருர்களா? இல்லையே! ஏன்? கேரளத்தை நேசிக்கின்ற மாதிரி மற்றப் பகுதிகளை நேசிக்கிருர்களா? இயற்கையாக அந்த எண்ணம் ஏன் உதிக்கிறது? தங்கள் கட்சியை ஆதரித்த மக்கள் பெருவாரியானவர்கள் இருக்கின்ற பகுதியின்மேல் அவ்வளவு ஆசை வருவானேன் என்ருல், 'அதுதான் சரி; இயற்கையுங்கூட'—என்பது தவிர, வேறென்ன?

"ரஷ்யாவில் மாத்திரம் முதலில் பொதுவுடைமை வரவேண்டுமா? அல்லது அகில உலகத்திற்கே பொதுவுமை மலர வேண்டுமா என்றபோது, ரஷ்யாவில் பெரும் கலகத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கியதையும், ஸ்டாலினுக்கும்-டிராட்ஸ்கிக்கும் ஏற்பட்ட பூசலும் நான்காவது அகிலம் தோன்றியதன் காரணத்தையும், மெக்சிகோவில் தோழர் டிராட்ஸ்கிக்கு ஏற்பட்ட பரிதாபகரமான முடிவையும் தோழர்கள் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

"இறுதியில் எது வெற்றி பெற்றது? யார் வெற்றி பெற்ருர்கள்? ரஷ்யாவுக்கு மாத்திரந்தான் என்ற கொள்கை முடிவுபெற்றது; அந்த கொள்கையை ஆதரித்து நின்ற ஸ்டாலின் வெற்றி பெற்ருர் என்பதைத் தோழர்கள் மறந்துவிடக்கூடாது.

கேரளம் பேசுகிறது

"இன்று கேரளத்தில் அமைக்கப்பட்டிருக்கிற கம்யூனிஸ்டு சர்க்கார், 'ஜனநாயக வழி நடப்போம்' என்று பேசுகிறது! 'மத சுதந்திரத்தில் தலையிட மாட்டோம்' என்று சொல்லுகிறது! வடநாட்டிலுள்ள மூலதன முதலைகளுக்கு அழைப்பு அனுப்புகிறது! இவை எல்லாம், தெளிந்த கம்யூனிசத்தின் கோட்பாடுகள் அல்லவே! போகட்டும்; கொஞ்சம் அருகாமையில் வந்து நிற்கக்கூடிய கோட்பாடுகள் கூட அல்லவே அவை! கம்யூனிசப்படி - பொருள் முதல் வாதப்படி, எதிர்த்து நிற்கும் முரண்பட்ட கோட்பாடுகளாயிற்றே! எப்படி இவ்வளவு வளைந்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது?

காலம் - இடம் - மக்கள்!

"இடம்—அதில் வாழ்கிற மக்கள் - அவர்கள் வாழ்கின்ற காலம் ஆகியவைகளின் தன்மைக் கேற்பவே, அரசியல், மாற்றுருவம் கொள்கின்றது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. பொதுவுடைமை தத்துவத்தின் எல்லை ஐந்து கண்டங்களையும், அவைகளைச் சுற்றித் தேங்கும் கடல்களிலுள்ள தீவுகளையும் கொண்டதாயிருக்கலாம். ஆனல், ஜனநாயகத்தின் எல்லை அவ்வளவு பெரியதாயிருந்தால் நிச்சயம் வெற்றி பெருது என்பதை எல்லா ஜனநாயக வாதிகளும் சொல்லியாகி விட்டது.

"ஜனநாயகம் வெற்றி பெறுவதாயிருந்தால் ஆளும் வர்க்கத்தின் நேரடியான பார்வை அடிக்கடி இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதை நாம் இங்கே உணருகிருேம்.

"நேருவின் நேரடியான பார்வை இந்த 36 கோடி மக்கள் வாழும் பகுதிகளின் மூலை முடுக்குகளில் பாயாத காரணத்தினுல் தான், இந்திய நாட்டு ஜனநாயகம் வெற்றி பெருமல் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் பொதுவுடைமை பொட்டலத்தின்மேல் ஜனநாயக இலேபிளை ஒட்டிவைத்திருக்கின்ற பொதுவுடைமைத் தோழர்கள் உணருவார்கள் என்று நினைக்கிறேன்.

நோயாளியும்-டாக்டரும்

"ஒரு கட்சியும்—நாடும், நோயாளியும் — டாக்டரும் மாதிரி! நோய் இன்னதென்றும், அதற்கு இன்ன மருந்து என்றும், டாக்டருக்குத் தெரியவேண்டும். அதே போல், தனக்கு என்ன நோய் என்று நோயாளிக்குத் தெரியவேண்டும்; அது இந்த டாக்டரால் குணமடையும் என்று நேயாளிக்குத் தெரிய வேண்டும்.

"நோய் ஒன்று கிடக்க, டாக்டர் ஒன்று சொல்ல, மருந்தொன்று கொடுத்தால் நிலைமை என்னவாகும்? நோயும் நீங்காது—டாக்டருக்கும் கெட்ட பெயர்!

"அதைப்போலத்தான், நோய் இன்னதுதான் என்று அறியாமல், மருந்தொன்று கொடுத்ததால்தான் இந்நாட்டு நோயும் நீங்கவில்லை; பொதுவுடைமை டாக்டர்களுக்கும் கெட்ட பெயர் ஏற்பட்டது!

"ஆனல், தி. மு. கழக டாக்டர்கள் நல்ல பெயர் எடுக்கிருர்கள் என்ருல், நோயையும் அறிந்து, நாடியையும் அறிந்து, நல்ல மருந்தையும் அறிந்து கொடுக்கிருர்கள்; அதனுல்தான், நாட்டு மககளால் நல்ல முறையிலே அவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

"இந்த உண்மையை நமது பொதுவுடைமை நண்பர்கள் அறியாத காரணத்தினுலே தான், ரஷ்யாவில் ஏற்பட்ட நோய்தான் இந்தியாவிலும் ஏற்பட்டிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு, அங்கே கொடுத்த மருந்தையே இங்கேயும் கொடுத்தார்கள்.

"அதன் விளைவுதான், நாம் ஏதோ அவர்களுக்குப் போட்டியாக மருத்துவமனைகள் திறந்து விட்டோம் என்று வருத்தப்படுகிருர்கள்! சில இடங்களிலே ஆத்திர நெருப்பை அள்ளி அள்ளி வீசுகிருர்கள்!

"அங்கே (ரஷ்யாவில்) ஏற்பட்ட நோய் முதலாளி—தொழிலாளி, ஏழை—பணக்காரன் என்பதுதான்!

"இங்கே, மேற் சொன்ன இரண்டுக்கும் மேலாக, சமூக கோபுரத்திலே ஒரு சிலர்! சாக்கடையிலே பலர்! - என்ற நிலை இருக்கிறது.

"தீண்டாதே--என்று அங்கே யாரையும் யாரும் சொன்னதில்லை; இங்கே, அதுவே திரண்டெழுந்த சமூக கூச்சலாகப் போய்விட்டது!

"ஸ்டாலின் ஒரு தோல் பதனிடும் தொழிலாளியின் மகன்தான் என்ருலும், அவர் ஒரு 'சர்வாதிகாரி,' என்றுதான் சொல்ல முடிந்ததே தவிர, 'சக்கிலி'யின் மகன் என்பதால் அவரை வெறுக்கிருேம் என்று அங்கே யாரும் சொல்லவில்லை!

"இங்கே அம்பேத்கார், இந்திய அரசியல் சட்டத்தை எழுதித் தந்த மேதைதான் என்ருலும் அவர் வரலாற்றை எழுதும் போது 'அவர் ஓர் ஆதித் திராவிட இனத்தில் பிறந்தவர்'' என்று எழுதாமலா விட்டுவிடுகிருர்கள்?

"இந்தநிலையைப் போக்கவேண்டாமா—போக்கக்கூடாதா—போக்குவது தவறு?-என்றுதான் தி. மு. கழகம் கேட்கிறது.

"இந்த சமூக புரட்சியிலே தைரியமாகக் குதித்து முன்னேறி வருவது நம் கழகந்தான் என்பதை யார் மறுக்க முடியும்?

"மனிதர்கள் செய்கின்ற காரியங்கள் இரண்டு வகைப்படும்; ஒன்று—'எதுசரி' என்று தோன்றுகிறதோ அதைச்செய்வது!

"மற்ருென்று—'எது தேவை,' என்று தோன்கிறதோ அதைச் செய்வது!

"இதில், 'எதுசரி' என்று தோன்றுகிறதோ அதைச் செய்கிறது, கம்யூனிஸ்டுக் கட்சி!

"எது தேவை—என்று தோன்றுகிறதோ அதைச் செய்கிறது, தி. மு. கழகம்!

"எது சிறந்தது—என்பதை, இங்கே கூடியிருக்கும் பெருமக்களாகிய நீங்களே சிந்தித்துத் தெளிவு பெறுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.''

பெங்களூர், ஏப். 19—

மைசூர் மாநிலத்தில் ஒருபெரிய தேனிரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும் என்று தான் நம்புவதாகவும், இந்தத் திட்டத்தை ஆராய்ந்த பின் ரஷ்ய நிபுணர்கள் சாதகமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர் என்றும், பதவியேற்ற பின் வானெலியில் பேசுகையில் மைசூர் மாநில முதலமைச்சர் கூறியிருக்கிருர்.

ஸ்ரீ கலா நிகேதன்—சென்னை-1.

21—4—57 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

இராஜா அண்ணுமலை மன்றத்தில்

அண்ணு அவர்கள் தலைமையில்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

நடிக்கும் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தின்

'அட்வகேட் அமரன்'

நாடகம்

★

கட்டணம்; ரூ. 10, 5, 3, 2, 1.

கழகக் கூட்டம்

★

சேலம்-அம்மாப்பேட்டை:

காந்தியார் திடல்

21-4-57 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: பி. ரங்கசாமி

பேசுவோர்:

என். வி. நடராசன்

இ. ஆர். கிருட்டிணன்

சிற்றுளி-சுப்பிரமணியம்

கே. ஆர். சித்தன்

அணுகுண்டு எஸ். ஆறுமுகம்

★

மதுரை:

திலகர் திடலில்

21-4-57 மாலை 6-30 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

எஸ். முத்து

சென்னை 2-வது வட்டத் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

21—4—57 காலை 9 மணிக்கு மேற்படி கிளை செயற் குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்; வரவு-செலவுக் கணக்குகள் ஆய்வுக்குவரும்.

க. அன்பழகனுக்கு

மேலக்காவேரியில் வரவேற்பு

21—4—57 மாலை குடந்தை—மேலக்காவேரி முகம்மதலிப் பூங்காவில், தோழர் கே.கே. நீலமேகம் தலைமையில், குடந்தை நகர தி. மு. கழகச் சார்பில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு ஓர் வரவேற்பு அளிக்கப்படும்.

வளவனூரில்

கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு

பாராட்டுக் கூட்டம்

22—4—57 மாலை 6-மணிக்கு வளவனூர் தி. மு. கழகச் சார்பில், துரெளபதை அம்மன் கோயில் திடலில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். அன்று, ஏ. கோவிந்தசாமி, எம். செல்வராஜ், சி. நடராசன், எம். ஆனந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஏப். 21: காலை—திண்டுக்கல் திருமணம்

மாலை—சேலம் பொதுக்கூட்டம்

22: சிவபுரி

பிரேமா விஞ்ஞானக் கண்ணுடித் தொழிற்சாலை திறப்பு விழா

21—4—57 மாலை 4 மணிக்கு, சென்னை-பெரம்பூர் ஆர்.பி.சி.சி.சி. உயர்தரப் பள்ளியில், எம். கே. நவநீதம் தலைமையில், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் துவக்கி வைப்பார்.

திருமணம்

21—4—57 காலை 8½ மணிக்கு, சென்னை-மக்கிமாநகர், பண்ணைக்கார ஆரோக்கியம் தெரு, 27-ம் இல்லத்தில், தோழர் அ. பொ. அரசு தலைமையில், தோழர் வி. எஸ். சண்முகம்—தோழியர் பி. சரசுவதி வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும்; அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, வி.எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

ஆண்டு விழா - 'சீசன் டிக்கெட்' வெற்றி விழா

21—4—57 மாலை 5 மணிக்கு, சென்னை அகில இந்திய ஆர். எம். எஸ். ஊழியர் சங்க (பிரிப்பகப் பகுதி) 3-வது ஆண்டு விழாவும், 'சீசன் டிக்கெட்' வெற்றி விழாவும், சென்னை அஞ்சல் பிரிப்பக அலுவலகம்—துரித அஞ்சல் மன்றத்தில், தோழர் எம். இராமலிங்கம் (பிள்ளை) தலைமையில் நடைபெறும்; தோழர் ஏ.எம்.ஏ. மஜீத் விழாவைத் துவக்கிவைப்பார்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் நாஞ்சில் அலி மிர்சா, ஜி. நாராயணசாமி ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

இராயபுரம் நீல மன்றம்

22—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை—இராயபுரம் பனைமரத்தொட்டி — அம்மன்கோவில் மைதானத்தில் தோழர் ஆர். எல். லிங்கராசு தலைமையில் தோழர்கள் கண்ணதாசன், எஸ். எஸ். தென்னரசு, வே. தி.நு. அரசு, மாணவி-சற்குணம் ஆகியோர் பேசுவர்; தோழர் டேப் - இராமானுசம் இன்னிசை நடைபெறும்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

21—4—57 காலை 10 மணிக்கு, சென்னை—இராயபுரம், பனைமரத்தொட்டி-அட்டபாளையம் பசனைக் கோயிலில், தோழர் சாமி-சிதம்பரனர் தலைமையில் ஆர். எல். லிங்கராசு, கு. பெ. துரைசாமி, மற்றும் பலர் பேசுவர்.

சென்னை—திருவொற்றியூர் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

21—4—57 பிற்பகல் 3 மணியளவில், மேற்படி கிளையின் செயற்குழு 'கலை வளர்ச்சி மன்ற' பணிமனையில் நடைபெறும்; தோழர்கள் வருகைதர வேண்டப்படுகிருர்கள்.

சென்னை சர்க்கார் கடைநிலை ஊழியர்கள் சங்க ஆண்டு விழா

22—4—57 மாலை 5-15 மணி அளவில் மேற்படி சங்க ஆண்டு விழா, சென்னை கலெக்டர் அலுவலகத்தில் (திறந்த வெளியில்) நடைபெறும். சென்னை மாவட்டக் கலெக்டர் தோழர் எஸ். தாயப்ப தேவர் விழாவைத் துவக்கி வைப்பார்; தோழர் எஸ். ஜெகதீசன் தலைமையில் தோழர்கள் பலர் பேசுவர்.

பாராட்டுக் கூட்டம் ஒத்திவைப்பு

"சென்னை 10-வது வட்டம் சண்முகராயன் தெருவில், 20—4—57-ல் நடைபெற இருந்த பாராட்டுக் கூட்டம் எதிர்பாராதவிதமாய் தள்ளி வைக்கப்பட்டது"

என்று, அவ்வட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் தமிழ்தாசன் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகு அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.